भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department), New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புதுதில்லி

The translation in Tamil of the Judicial Officers Protection Act, 1850 (18 of 1850), The Powers of Attorney Act, 1882 (7 of 1882), The Prevention of Seditious Meetings Act, 1911 (10 of 1911), The Destructive Insects and Pests Act, 1914 (2 of 1914), The Collections of Statistics Act, 1953 (32 of 1953), The State Armed Police Forces (Extension of Laws) Act, 1952 (63 of 1952), The Foreign Jurisdiction Act, 1947 (47 of 1947), are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850 (18/1850), பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 (7/1882), அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிக் கூட்டங்கள் தடுப்புச் சட்டம், 1911 (10/1911), அழிவு செய்யும் பூச்சிகள் மற்றும் நாசகாரப் பூச்சிகள் சட்டம், 1914 (2/1914), புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 (32/1953), மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 (63/1952), அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 (47/1947), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

[Price Rs. 22.00]

# அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947

## (சட்ட எண் 47/1947)

[1947, டிசம்பர் 24]

மைய அரசாங்கத்தின் குறித்தசில அயல்நாட்டு அதிகாரவரம்பினைச் செலுத்துவதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

மைய அரசாங்கம், உடன்படிக்கை, உடன்பாடு, கொடை, வழக்காறு விட்டுக்கொடுத்தல் மற்றும் சட்டமுறையான பிற வழிகளினால் இந்தியாவிற்கு வெளியிலுள்ள பரப்பிடங்களின் மற்றும் அவை தொடர்பான அதிகார வரம்பை ஈட்டியிருப்பதாலும் மற்றும் இதற்குப் பின்பு ஈட்டலாம் என்பதாலும் ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது;

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 என வழங்கப்பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில்—

(அ) "அயல்நாட்டு அதிகார வரம்பு" என்பது, இந்தியாவிற்கு வெளியேயுள்ள பரப்பிடம் எதிலும் அல்லது அது பொறுத்து, மைய அரசாங்கம் உடன்படிக்கை, உடன்பாடு, கொடை, வழக்காறு, விட்டுக்கொடுத்தல் அல்லது சட்டமுறையான பிறவழிகளினால் அப்போதைக்குக் கொண்டிருக்கிற அதிகாரவரம்பு எதுவும் என்று பொருள்படும்;

(ஆ) "அதிகார வரம்பு" என்பது, உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் அதிகார அடைவை உள்ளடக்கும்.

அதிகார வரம்பைச் செலுத்துவது.

3. (1) மைய அரசாங்கம், தான் தக்கதெனக் கருதுகிறவாறான முறையில் அயல்நாட்டு அதிகாரவரம்பைச் செலுத்துவது சட்டமுறையானதாகும்.

(2) மைய அரசாங்கம், தான் தக்கதெனக் கருதுகிறவாறான முறையிலும், அளவிலும் மேற்சொன்னவாறான அதிகாரவரம்பு எதையும் ஏதேனும் அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பிற்கு ஒப்படைவு செய்யலாம்.

ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அதிகாரம்.

4. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மைய அரசாங்கத்தின் அயல்நாட்டு அதிகாரவரம்பு எதையும் திறம்படச் செலுத்துவதற்காக அதற்கு உகந்ததாகத் தோன்றலாகும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அந்த உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை எதனாலும்,—

(அ) மாநிலம் எதிலும் செல்லாற்றலிலுள்ள செய்சட்டம் எதனின் வகையங்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்குமான மாற்றங்களுடன் அல்லது மாற்றங்கள் அல்லாமல் பொருந்துவதன் மூலமோ அல்லது பிறவாறாகவோ கடைப்பிடிக்கவேண்டிய சட்டம் அல்லது நடைமுறையைத் தீர்மானிப்பதற்காக,

(ஆ) பொதுவாகவோ அல்லது குறிப்பிட்ட நேர்வுகளிலோ அல்லது நேர்வுகளின் வகைகளிலோ எந்த நபர்கள் அதிகாரவரம்பைச் செலுத்துகிறார்களோ அந்த நபர்களையும் அவர்களால் செலுத்தப்படவேண்டிய அதிகாரங்களையும் தீர்மானிப்பதற்காக,

(இ) இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்பட்ட அதிகாரவரம்பின் துணையாகவுள்ள, அல்லது இணையாகவுள்ள அல்லது விளைவுகளாகவுள்ள அதிகாரவரம்பு எதுவும், எந்த நீதிமன்றங்களால், நீதிபதிகளால், குற்றவியல் நடுவர்களால் மற்றும் அதிகார அமைப்புகளால், ஏதேனும் மாநிலத்தினுள் செலுத்தப்பட வேண்டியதாயிருக்கிறதோ அந்த நீதிமன்றங்கள், நீதிபதிகள், குற்றவியல் நடுவர்கள் மற்றும் அதிகாரஅமைப்புகளைத் தீர்மானிப்பதற்காக, மற்றும் அந்த அதிகாரவரம்பு எந்த முறையில் ஏதேனும் மாநிலத்தினுள் செலுத்தப்பட வேண்டியதாயிருக்கிறதோ அந்த முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, மற்றும்